


நல்லவே எண்ணல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

எண்ணிய முடிதல் வேண்டும்...




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 35 | 1.08.2025 | FRIDAY | AADI : 16 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 35 | 1.08.2025 | வெள்ளிக்கிழமை | ஆடி : 16 | விலை : ரூ.5/- |

3 டெல்லி-மும்பை வழித்தடத்தில் மதுரா-கோட்டா பிரிவில் கவாச் 4.0 இயக்கப்பட்டது ரயில்வே அமைச்சர் ஸ்ரீ அஸ்வினி வைஷ்னவ்

4 "பாகிஸ்தானிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம்" ட்ரம்ப்

2 மாநகராட்சி கழிவறை பராமரிப்பு செலவு ரூ.1,000 கோடியா? நயினார் நாகேந்திரன் கண்டனம்

# 'பாஜகவுடனான உறவு முறிந்தது' ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின் ஓபிஎஸ் தரப்பு அறிவிப்பு

சென்னை: ஆக.1-

தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இதுவரை கொண்டிருந்த உறவை அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு முறித்துக் கொள்வதாக, அதன் முக்கியத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பண்ருட்டி ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் உயர்நிலைக் கூட்டம் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் இன்று நடைபெற்றது. அதில் 3 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருந்த உறவை அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு முறித்துக் கொண்டது. அடுத்ததாக, தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் விரைவில் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களுக்கும் சுற்றுப்பயணம்



மேற்கொள்ளவிருக்கிறார். மூன்றாவதாக, தேர்தலில் இப்போதைக்கு நாங்கள் எந்தக் கட்சியுடனும் கூட்டணியில் இல்லை. எதிர்காலத்தில் அரசியல் நிலவரங்களுக்கு ஏற்ப கூட்டணி குறித்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது." என்றார்.

கூட்டணி முறிவுக்கான காரணத்தைக் கேட்டபோது, "காரணம் நாடு அறிந்ததே. அதை யாரும் சொல்லத் தேவையில்லை. பாஜக எங்களுக்கு என்ன செய்தது என்பது அனைவருக்கும் தெரியும்." என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறினார்.

திமுக அரசை வீழ்த்த வேண்டுமென்பதில் உங்களுக்கு உடன்பாடா? என்ற கேள்விக்கு, பண்ருட்டி ராமச்சந்திரன், "யாரை வீழ்த்த வேண்டும் என்பது எங்களது குறிக்கோள் அல்ல. யாரையெல்லாம் வாழ்த்த வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள்." என்று சூசகமாக பதில் சொன்னார்.

முதல்வருடன் சந்திப்பு ஏன்? இன்று காலை நடைப்பயிற்சியின் போது ஓபிஎஸ் முதல்வர் ஸ்டாலின் சந்தித்துக் கொண்டது குறித்த கேள்விக்கு, "நான் சென்னையில் இருந்தால் தியோசோஃபிக்கல் சொசைட்டி வளாகத்தில் நடைப்பயிற்சி மேற்கொள்வது வழக்கு. அங்கு இன்று முதல்வரும் நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தார். அவருக்கு வணக்கம் சொல்லிவிட்டுச் சென்றேன்." என்றார்.



இணையத்தில் வாசிக்க..,

## இந்தப் பகுதி "அரசுத்துறையில் நேர்மையாக பணியாற்றி மக்கள் மனதை வென்றவர்களை அடையாளம் கண்டு அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கம் கொண்டது". அந்த வரிசையில்...

# "இந்த வாரம் இவர்"

ஆயுள் காப்பீட்டு நிறுவன ஆலோசகர் அனந்தகிருஷ்ணன் சேஷாத்ரியின் முகநூல் பதிவு.

மிக மதிப்பிற்குரிய

**திரு. ஜேம்ஸ் கென்னடி** அவர்களுக்கு,
இளமின் பொறியாளர் JE & TNEB),
திருப்பூர் அவர்களுக்கு,
வணக்கம்.

நீங்கள் விரைவில் ஓய்வுபெற உள்ளீர்கள் என்ற செய்தி, ஒரு பக்கம் மகிழ்ச்சி, மற்றொரு பக்கம் ஒரு நேர்மையான அதிகாரியை அலுவலகத்தில் பார்க்க முடியாது என்ற சோகத்தையும் ஏற்படுத்துகிறது. நீங்கள் TNEB இல் மக்களுக்காக தாராளமாக, முழுமனதுடன் செய்த சேவை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தது.

நேர்த்தியான பணியாற்றும் பழக்கம் – நேரம் குறைபாடின்றி, கடமையை முழுமையாகச் செய்தல்.

புகார்களுக்கு உடனடி நடவடிக்கை – மக்கள் வீடுகளுக்கு நேரில் சென்று, நேரத்தில் தீர்வு.

விடுமுறை நாட்களிலும் சேவை மனப்பான்மை – இரவு நேரம்/ ஓய்வுநாள்களைக் கூட புறக்கணிக்காமல் சேவை செய்தல்.

அனைவரிடமும் மரியாதையான அணுகுமுறை –அனைவரையும் பண்புடன் அணுகல்.

அதிவேக சேவைகள்: மின்தடை சரிசெய்தல்,மீட்டர் மாற்றம்,புதிய இணைப்பு,சோதனை மற்றும் பராமரிப்பு

புதிய ணிஙி இணைப்புகளில் தெளிவான வழிகாட்டல் – நெடுநாள் காத்திருக்காமல். உடனடி சேவை.

பாதுகாப்பான நடவடிக்கைகள் – மற்றும் மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு செயல்படுதல். பொறுப்பு மற்றும் அக்கறை.

மின்சார கட்டண விளக்கம் – மக்களுக்கு தெளிவான விளக்கங்களுடன் உறுதியான பதில்கள்.

மின்சார பாதுகாப்பு விழிப்புணர்வு – பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய சேவை.

அரசியல் பரிந்துரை இல்லாமலும் நேர்மையாக சேவை செய்து மக்களின் நம்பிக்கையை வென்ற நற்பெயர்.

எனது குடும்பம் மற்றும் தொழில்துறையில் மின்வாரியம் சார்ந்த பணிகளில் சிறந்த துணையாக இருந்தது – தனிப்பட்ட நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

நண்பர்கள், மற்ற ஊர், வேறு மாவட்டத்தினருக்கும் நான் உங்களை பரிந்துரைத்த போது, அவர்களும் திருப்தியடைந்தனர் – இது உங்கள் சேவையின் பரந்த வரம்பை நிரூபிக்கிறது.

மற்ற அதிகாரிகளுக்கும் வழிகாட்டி – முன்மாதிரியான பணியாற்றும் முறை.

இப்போது ஓய்வு பெறும் இந்த தருணத்தில், நீங்கள் TNEBக்கு பெருமை சேர்த்த ஒரு அரசாங்க அதிகாரி என்ற அந்தஸ்துடன் ஓய்வுபெறுகிறீர்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகிறேன். இனி வரும் நாட்கள்:

ஆரோக்கியம் நிரம்பியதாக
குடும்ப மகிழ்ச்சி நிரம்பியதாக
அமைதி மற்றும் ஆனந்தம் நிரம்பிய ஒய்வுக் காலமாக வாழ்த்துகிறேன்.

மீண்டும் உங்கள் அருமையான சேவைக்கு ஆழ்ந்த நன்றியுடன்,

**ஆனந்த கிருஷ்ணன்.**

**இது போன்ற நேர்மையான அதிகாரிகளை உங்கள் வாழ்த்துக்களுடன் மெருகூட்ட மனதிருந்தால் தயங்காமல் மேலும் இது போன்ற அதிகாரிகளை குறித்து உங்களுக்கு தெரிந்தால் கீழ்க்கண்ட கைபேசி எண்ணை அழைக்கவும்.**

**செல்: +91 88705 00000 அனுப்பி வையுங்கள் பிரசுரிக்க தயாராக இருக்கிறோம்**

# கொடிக்கம்பம் வழக்கில் தவெக இடையீட்டு மனு தாக்கல்



மதுரை: ஆக.1-

தமிழகத்தில் பொது இடங்களில் உள்ள கொடிக்கம்பங்களை அகற்றும் உத்தரவுக்கு எதிரான வழக்கில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தேசிய, மாநில நெடுஞ்சாலைகள், உள்ளாட்சி இடங்கள் என பொது இடங்களில் உள்ள அரசியல் கட்சிகள், சாதி, மத அமைப்புகளின் கொடிக் கம்பங்களை அகற்றுமாறு நீதிபதி இளந்திரையன் ஜன.27ல் உத்தரவிட்டார். இந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டமேல் முறையீட்டு மனுவை நீதிபதி நிஷாபானு அமர்வு தள்ளுபடி செய்தது.

இந்நிலையில், கொடிக் கம்பங்களை அகற்றும் உத்தரவை ரத்து செய்யக் கோரியும், இந்த உத்தரவில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு விலக்கு அளிக்கக் கோரியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் அமர்வு விசாரித்து, வழக்கை 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றியது.

இந்த மனு நீதிபதிகள் சுப்பிரமணியம், சவுந்தர், விஜயகுமார் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, "இந்த வழக்கில் இணைய விரும்பும் கட்சிகள், அமைப்புகள் ஆக. 5க்குள் இடையீட்டு மனு தாக்கல் செய்ய வேண்டும். அதுவரை கொடிக்கம்பங்களை அகற்றும் விவகாரத்தில் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும்" என உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து, தமிழக வெற்றிக்கழகம் சார்பில், அதன் பொதுச் செயலாளர் என்.ஆனந்த், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் இடையீட்டு மனுதாக்கல் செய்துள்ளார். அதில், "அரசியல் கட்சிகள் தங்களின் கொள்கைகளை பரப்புவதற்காக சட்டப்பூர்வமாக கொடிக்கம்பங்களை நிறுவி வருகின்றனர். ஆனால், நீதிமன்ற தடை உத்தரவினால் அனைத்து அரசியல் கட்சிகளும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. குறிப்பாக, எங்கள் கட்சி கடுமையான பாதிப்பை சந்திக்கிறது.

எனவே, கொடிக்கம்பங்களை அகற்றும் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில் எங்கள் கட்சியையும் ஒரு தரப்பாக சேர்த்து, இது தொடர்பாக எங்கள் தரப்பில் இருந்து சட்டப்பூர்வ கருத்துகளையும் தெரிவிக்க வாய்ப்பு வழங்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 613 அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவம் படிக்கும் வாய்ப்பை பெற்றனர்: சேர்க்கை ஆணைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்

சென்னை: ஆக.1-

எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கான கலந்தாய்வில் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டில் 613 அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்லூரிகளில் சேருவதற்கான ஆணைகளை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டுக்கு 6,600 எம்பிபிஎஸ் இடங்கள், 1,583 பிடிஎஸ் இடங்கள் உள்ளன.

இதில் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டில் அரசு பள்ளி மாணவர்களுக்கு 494 எம்பிபிஎஸ் இடங்கள், 119 பிடிஎஸ் இடங்கள் வழங்கப்படுகின்றன. இந்நிலையில், சிறப்பு பிரிவு (மாற்றுத்திறனாளி, முன்னாள் ராணுவ வீரர்களின் வாரிசு, விளையாட்டு வீரர்) சிறப்பு பிரிவு கலந்தாய்வு மற்றும் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டு இடங்களுக்கு அரசு பள்ளி மாணவர்களுக்கான கலந்தாய்வு நேரடியாக நேற்று சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் நடந்தது.



இதில் தேர்வான மாணவ, மாணவிகளுக்கு கல்லூரிகளில் சேருவதற்கான ஆணைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். இதன்படி 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின் கீழ் விவசாயி, கூலி தொழிலாளி உட்பட ஏழை குடும்பத்தை சேர்ந்த 613 அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளனர்.

இந்நிகழ்வில் சுகாதாரத்துறை செயலர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) தேரணிராஜன், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மணி உள்ளிட்டோர் உடன் இருந்தனர். இதேபோல் முதல் சுற்று பொது கலந்தாய்வு https://tnmedicalselection.net/ என்ற சுகாதாரத்துறை இணையதளத்தில் நேற்று காலை காலை 10 மணிக்கு தொடங்கியது.

ஆக.5ம் தேதி தரவரிசை பட்டியல் அடிப்படையில் கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இடஒதுக்கீடு விவரங்கள் ஆக.6ம் தேதி வெளியாகும். ஆக.11ம் தேதி மாலை 5 மணிக்குள் இடஒதுக்கீடு பெற்ற கல்லூரிகளில் சேர வேண்டும்.

மருத்துவராகும் 49 வயது பெண்: தென்காசி மாவட்டத்தை சேர்ந்த பிசியோதெரபிஸ்ட் அமுதவல்லி (49). இவரது மகள் சம்யுக்தா கிருபாலனி. நீட் தேர்வுக்கு சம்யுக்தா தயாராகி வந்த நிலையில், மகளின் வழிகாட்டுதலின்படி, மாற்றுத் திறனாளி தாயாரான அமுதவல்லியும் நீட் தேர்வு எழுதி 147 மதிப்பெண் பெற்றார். மகள் 450 மதிப்பெண்களும் பெற்றார்.

இருவரும் எம்பிபிஎஸ் படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பித்தனர். அமுதவல்லி மாற்றுத் திறனாளி என்பதால், சிறப்பு பிரிவு கலந்தாய்வில் அவருக்கு விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் இடம் கிடைத்துள்ளது. மகள் சம்யுக்தா ஆன்லைனில் நடைபெறும் பொது பிரிவு கலந்தாய்வில் பங்கேற்கிறார். அவருக்கும் இடம் கிடைக்க வாய்ப்புள்ளது.



# சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தர்களுக்கு பிரசாதமாக நெற்கதிர் வழங்கல்

தேனி, ஆக.01-
சபரிமலை ஐயப்பன் கோயிலில் நிறைபுத்தரி வழிபாட்டுக்காக சிறப்பு பூஜை செய்யப்பட்டு, பக்தர்களுக்கு நெற்கதிர்கள் பிரசாதமாக வழங்கப்பட்டன. பல்வேறு வழிபாடுகளுக்கு பிறகு நேற்று இரவு கோயில் நடை சாத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் நெல் அறுவடை தொடங்கும் காலங்களில் சபரிமலை ஐயப்பன் கோயிலில் நிறைபுத்தரி வழிபாடு நடைபெறுவது வழக்கம்.

இந்த ஆண்டுக்கான பூஜை நேற்று நடைபெற்றது. இதற்காக, அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் நேற்று முன்தினம் நெற்கதிர்கள் கொண்டுவரப்பட்டன. பம்பை கணபதி கோயிலில் சிறப்பு வழிபாட்டுக்குப் பிறகு 18ம் படி வழியே ஐயப்பன் சந்நிதிக்கு தலைச்சுமையாகக் கொண்டு வரப்பட்டன.

தந்திரிகள் கண்டரரு ராஜீவரு, பிரம்மதத்தன் ராஜீவரு ஆகியோர் தலைமையில் இந்த நெற்கதிர்கள் பெறப்பட்டன. தொடர்ந்து கொடி மரத்துக்கு கிழக்கே உள்ள மண்டபத்தில் மேல்சாந்தி அருண்குமார் நம்பூதிரி நேற்று சிறப்பு பூஜைகள் செய்தார். பின்பு ஐயப்பன் சந்நிதியில் நெற்கதிர்கள் வைக்கப்பட்டு, பூஜைகள்செய்யப்பட்டன.

பின்னர், அவை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டன. பல்வேறு வழிபாடுகளுக்குப் பிறகு நேற்று இரவு 10 மணிக்கு கோயில் நடை சாத்தப்பட்டது. அடுத்ததாக ஆக. 16ம் தேதி மாதாந்திர பூஜைக்காக நடை திறக்கப்படும் என்று தேவசம்போர்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மாநகராட்சி கழிவறை பராமரிப்பு செலவு ரூ.1,000 கோடியா? நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை: ஆக.1-
பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை: சென்னை மாநகராட்சியின் 1,260 இடங்களில் உள்ள 10,000 பொதுக் கழிவறைகளை சுத்தம் செய்வதற்காக, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.620 கோடியும், ராயபுரம் மற்றும் திரு. வி.க. நகர் ஆகிய இரண்டு மண்டலங்களில் உள்ள பொதுக் கழிவறைகளைத் தனியார்மயமாக்குவதற்கு ரூ.430 கோடியும் என திமுக ஆட்சியில் இதுவரை சுமார் ரூ.1000 கோடி செலவிடப்பட்டும் பொதுக் கழிவறைகளின் தரம் மிக மோசமாக உள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன.




தற்போதுள்ள முக்கால்வாசி பொதுக் கழிவறைகள் தண்ணீர், கதவு, தாழ்ப்பாள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் தரையெல்லாம் கறைபடிந்து, துர்நாற்றம் வீசுகின்றன என்பது திமுக அரசின் ஊழல் முகத்தை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

ஏற்கனவே, கடந்த 2023ல் மகளிர் நலனுக்காக ரூ.4.5 கோடி நிதி செலவில் அறிமுகப்படுத்தப்பட்ட “ஷீ டாய்லெட்" என்ற நடமாடும் மகளிர் கழிவறைகள், ஓராண்டுக்குள் காணாமல் போய் விட்ட நிலையில், மீதமிருக்கும் கழிவறைகளும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் கிடப்பது மிகப்பெரும் சுகாதார சீர்கேட்டுக்கு வழிவகுக்கும் என்பது ஆளும் அரசுக்கு தெரியாதா?

இப்படி அலங்கோலமாகக் காட்சியளிக்கும் கழிவறைகளைப் பராமரிக்க ஆயிரம் கோடி ரூபாய் செலவானது என அரசு கணக்கு காட்டுவது யார் காதில் பூ சுற்றுவதற்காக? இவர்கள் கொள்ளையடிக்கும் மக்கள் பணம் யாருக்கு செல்கிறது, எங்கே செல்கிறது? ஊழல் முறைகேடுகளுக்குப் பெயர் போன திமுக, தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் கழிவறையிலும் கொள்ளையடித்து கஜானாவை நிரப்பிக் கொள்ள துணிந்துள்ளது அருவருக்கத்தக்கது. இந்த ஆட்சியை அரியணையில் இருந்து அகற்றினால் மட்டுமே தமிழகம் புத்துணர்வு பெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடைகள் உரிமம் தொடர்பாக ஆய்வு செய்ய குழு: ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி தகவல்

சென்னை, ஆக.01-
வணிகர் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, கடைகள் உரிமம் தொடர்பான தற்போதைய சட்டத்தை ஆய்வு செய்ய குழு அமைக்கப்படுவதாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் 201112ல் 85,649 ஆக இருந்த வணிக உரிமங்களின் எண்ணிக்கை, பழனிசாமி ஆட்சியில் 202021ல் 2,05,100 ஆக உயர்ந்தது. அதேபோல, 201112ல் ரூ.5.40 கோடியாக இருந்த உரிமக் கட்டணம் பழனிசாமி ஆட்சியில் ரூ.12.90 கோடியாக உயர்ந்தது.

ஒவ்வொரு மாவட்டம், ஊராட்சி வாரியாக அவரது ஆட்சியில் கட்டணம் நிர்ணயித்துவிட்டு, தற்போது திமுக அரசைக் குறை சொல்கிறார் பழனிசாமி. அவரது இரட்டை வேடத்தையே இது வெளிப்படுத்துகிறது.

கிராமப்புற ஊராட்சிகளில் வணிகம். தொழில்புரிய பல்வேறு உரிமங்கள் ‘அபாயகரமானதும் மற்றும் தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமம்’ என்று பழைய நடைமுறையில் வழங்கப்பட்டு வந்தன. அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் இந்த உரிமம் புதுபிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறையும் உள்ளது. இதன் மூலம் ஊராட்சி களுக்கு வரி வருவாய் கிடைத்து வருகிறது.

அதேநேரத்தில், முறையான விதிகள் இல்லாததால் கிராம ஊராட்சிகள், தங்களது தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான கட்டணங்களை நிர்ணயம் செய்து, அதிக அளவில் கட்டணம் வசூலித்தன. இந்தக் குறைகளை நீக்கும்பொருட்டும், பல்வேறு வணிகர்களின் கோரிக்கையை ஏற்றும், தற்போது புதிதாக விதிகள் உருவாக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறையில் பல்வேறு நன்மைகள் உள்ளன.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக, உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்து முதல்வரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவில் உள்ள விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக, துறை அலுவலர்கள் மற்றும் வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குழு கிராமப்புறங்களில் சிறு வணிகர்கள் வணிக உரிமம் பெறுவது குறித்த நடைமுறையை எளிமைப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு, அரசுக்கு பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் புதிய சட்டத்தை நடைமுறை படுத்துவது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு

# ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், ஆக.01-
தமிழைத் தரணியெங்கும் கோலோச்சச் செய்யும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 27.12.1956இல் இயற்றப்பட்டது. இதற்கிணங்க அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் விரைவாகவும், முழுமையாகவும் நடைபெறத் துணைபுரியும் வகையில் மாவட்டந்தோறும் உள்ள அனைத்துத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 2025 26ஆம் நிதியாண்டில் ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது.



தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க உரிய விதிமுறைகளைப் பின்பற்றி நிகழாண்டில் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் 13.08.2025 மற்றும் 14.08.2025 ஆகிய இரண்டு நாள்களில் காலை 10.30 மணி முதல் மாலை 05.45 வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. இப்பயிலரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பல்துறை அலுவலர்கள், தமிழறிஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

பயிலரங்கில் பங்கேற்பவர்களுக்கு ஆட்சிமொழி வரலாறு, சட்டம், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், ஆட்சிமொழிச் செயலாக்கம், அரசாணைகள், ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும், மொழிப்பயிற்சி முதலிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளன.

மேலும் இப்பயிலரங்குகருத்தரங்கில் ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் அலுவலர் நிலையில் அலுவலர் (அ) கண்காணிப்பாளர் ஒருவரும், பணியாளர் நிலையில் உதவியாளர் (அ) இளநிலைஉதவியாளர் (அ) தட்டச்சர் ஒருவருமாக மொத்தம் இருவர் கலந்துகொண்டு பயன் பெற்றுக்கொள்ளலாம், என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ரகசிய சுரங்கங்களில் தண்ணீரைச் செலுத்தி தீவிரவாதிகள் தப்புவது முறியடிப்பு



புதுடெல்லி, ஆக.01-
எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இருந்து தப்பியோடுவதற்காக பஹல்காம் தாக்குதல் தீவிரவாதிகள் தோண்டிய ரகசிய சுரங்கங்களை பாதுகாப்புப் படையினர் கண்டறிந்து அதில் தண்ணீரைச் செலுத்தி அடைத்துள்ளனர். இதன்மூலம் அவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்கு தப்பியோடுவது முறியடிக்கப்பட்டது என்று தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த ஏப்ரல் மாதம் 22ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் கொடூரத் தாக்குதல் நடத்தினர். இதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை தேடும் பணியில் கடந்த 3 மாதங்களாக இந்திய ராணுவமும் புலனாய்வு அமைப்புகளும் ஈடுபட்டு வந்தன. இதனிடையே, ஜம்மு காஷ்மீரில் இந்திய ராணுவம், சிஆர்பிஎஃப் மற்றும் மாநில போலீஸார் இணைந்து நடத்திய `ஆபரேஷன் மகாதேவ்’ நடவடிக்கையில் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 3 தீவிரவாதிகள் சுலைமான் என்கிற ஃபைசல், ஹம்சா அப்ஹான், ஜிப்ரான் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முன்னதாக பஹல்காம் தாக்குதலில் இவர்கள் 3 பேரும் ஈடுபட்டதை உறுதி செய்வதற்காக, சண்டிகரிலுள்ள தடயவியல் அறிவியல் ஆய்வகத்துடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடர்ந்து தொடர்பில் இருந்தார்.

அவர்கள் பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்டதை உறுதி செய்த பின்னரே தகவலை நாடாளுமன்றத்தில் அவர் அறிவித்தார் என தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) வட்டாரங்கள் தெரிவித்தன. அதுமட்டுமல்லாமல், ஆபரேஷன் மகாதேவின்போது தீவிரவாதிகளிடமிருந்து கிடைத்த ஆயுதங்கள், துப்பாக்கிகள் ஆகியவற்றை சண்டிகர் ஆய்வகத்தில் ஆய்வு செய்தனர். அந்த துப்பாக்கிகளில் இருந்து அப்போது குண்டுகள் சுடப்பட்டு பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. அப்போது வெளியான காலி தோட்டாக்களையும், பஹல்காமிலுள்ள பைசரன் பள்ளத்தாக்கில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி கண்டெடுக்கப்பட்ட காலி தோட்டாக்களையும் ஒப்பிட்டு பார்த்தபோது அவை ஒரே துப்பாக்கியில் இருந்து வந்தவை என்பது தெரியவந்துள்ளது.

மேலும், ஆபரேஷன் மகாதேவில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர், எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் தப்பிக்க அமைத்து வைத்திருந்த ரகசிய சுரங்கங்களைக் கண்டறிந்தனர். இதையடுத்து சுரங்கப் பகுதியில் அவர்கள் பள்ளம் தோண்டி, ரகசிய வழிகளில் வெள்ள நீர் வருமாறு செய்துவிட்டனர். இதனால் தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்கு தப்பியோட முடியாதபடி தடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர்கள் என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டனர் என்று என்ஏஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

# இஸ்ரோ நாசா இணைந்து உருவாக்கிய ‘நிசார்’ செயற்கைக்கோளை விண்ணில் நிலைநிறுத்தி சாதனை

ஸ்ரீஹரிகோட்டா, ஆக.01-
புவி கண்காணிப்புக்காக நாசாவுடன் இணைந்து உருவாக்கிய அதிநவீன நிசார் ரேடார் செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி எஃப்16 ராக்கெட் மூலமாக திட்டமிட்ட கற்றுப்பாதையில் நிலைநிறுத்தி இஸ்ரோ சாதனை படைத் துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (நாசா) சேர்ந்து பூமியின் மேற்பரப்பு மாற்றங்களை கண்காணிப்பதற்காக நிசார் (NASA-ISRO Synthetic Aperture Racter) என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த முடிவு செய்தன. இதற்கான ஒப்பந்தம் 2014 செப்டம்பர் 30ல் கையெழுத்தானது. பின்னர், ரூ.12,000 கோடியில் நவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட நிசார் செயற்கைக்கோளின் தயாரிப்புப் பணிகள் கடந்த ஆண்டு நிறைவுபெற்றன.

இதையடுத்து, நிசார் செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி எஃப்16 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது. இந்த ராக்கெட் ஏவுதலுக்கான 27.30 மணி நேர கவுன்ட் டவுன் நேற்று முன்தினம் தொடங்கியது. தொடர்ந்து, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2வது ஏவுதளத்தில் இருந்து ஜிஎஸ்எல்வி ராக்கெட் நேற்று மாலை 5.40 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. தரையில் இருந்து புறப்பட்ட 19 நிமிட பயணத்துக்கு பின்னர் 745 கி.மீ. உயரத்தில், திட்டமிட்ட சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

மொத்தம் 2,392 கிலோ எடை கொண்ட நிசார் செயற்கைக் கோளின் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். இதில் எல் பேண்ட் மற்றும் எஸ் பேண்ட் ஆகிய சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரே செயற்கைக்கோளில் 2 அலைவரிசைகள் கொண்ட கருவிகள் இடம்பெறுவது இதுவே முதல்முறையாகும். இதன்மூலம் புவியின் சுற்றுச்சூழல் அமைப்பு, பருவநிலை மாற்றங்கள், பனிப்பாறைகள், வனப்பகுதிகள், பயிர்நில வரைபடம் மற்றும் மண்ணின் ஈரப்பத மாற்றங்கள், நிலத்தட்டுகள் நகர்வு உள்ளிட்ட பல்வேறு தகவல்களைப் பெறமுடியும்.



இந்த செயற்கைக்கோள் முழு பூமியையும் 12 நாட்களுக்கு ஒருமுறை சுற்றிவந்து, துல்லியமான தரவுகள் மற்றும் உயர் தெளிவுத்திறன் கொண்ட படங்களை அனைத்து சீதோஷ்ண நிலைகளிலும் வழங்கும். குறிப்பாக, பூகம்பம், சுனாமி, எரிமலை வெடிப்பு மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை அபாயங்களில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து கொள்ள, இடம் சார்ந்த தரவுகளை முழுமையாக வழங்கும். நிசார் அனுப்பும் தரவுகளை நாசா, இஸ்ரோ மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்களும் பெறமுடியும்.

இந்த திட்டத்தில் எல் பேண்ட் சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார், ஜிபிஎஸ் ரிஸீவர், அதிக திறனுடைய சாலிட் ஸ்டேட் ரெக்கார்டர் (செயற்கைக்கோளின் ஹார்ட் டிரைவ்) மற்றும் ஒரு பேலோட் டேட்டா சப் சிஸ்டம், 12 மீட்டர் ஆண்டனா ரிஃப்ளெக்டர் ஆகியவற்றை நாசா வடிவமைத்துள்ளது. மறுபுறம் எஸ் பேண்ட் சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார், 5.5 மீட்டர் நீளமுள்ள 2 சூரிய மின்தகடுகள் செயற்கைக் கோள் ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை இஸ்ரோ செய்துள்ளது. செயற்கைக்கோளை ஏவுவதற்கான ராக்கெட் தயாரிப்புடன், இதர பராமரிப்புகளையும் இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது.

தாமதம் ஏன்? நிசார் செயற்கைக்கோள் 2023ம் ஆண்டிலேலே செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், செயற்கைக்கோள் உருவாக்கத்தில் ஏற்பட்ட தாமதம் ஏற்பட்டதால் ஏவுதல் தள்ளிப்போனது. கடந்த ஆண்டு செயற்கைக்கோளில் உள்ள 12 மீட்டர் ஆண்டெனாவில் சில தொழில்நுட்பக் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. அவற்றை அமெரிக்கா கொண்டுசென்று, நாசா விஞ்ஞானிகள் சரிசெய்தனர். அனைத்து பரிசோதனைகளும் சிறப்பாக முடிந்ததையடுத்து, தற்போது செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

இது ஜிஎஸ்எல்வியின் 18வது திட்டமாகும். இதில் 14 திட்டங்கள் வெற்றி அடைந்துள்ளன. இந்த ஆண்டு இஸ்ரோ செலுத்திய 2 திட்டங்களும் தோல்வி அடைந்த நிலையில், நிசார் திட்டத்தின் மீது உலகளவில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. தற்போது இந்த திட்டம் வெற்றி பெற்றுள்ளது, சர்வதேச விண்வெளித் துறையில் இஸ்ரோவுக்கான மதிப்பை மீண்டும் உயர்த்தியுள்ளது.

அமெரிக்காவை தொடர்ந்து ஜப்பான், பிரான்ஸ், ஐரோப்பிய கூட்டமைப்பு ஆகிய விண்வெளி மையங்களுடன் இணைந்து, வருங்காலத்தில் இஸ்ரோ பல்வேறு திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

செயற்கைத் துளை ரேடார்: இதில் உள்ள செயற்கைத் துளை ரேடார் (SAR) தொழில்நுட்பம்தான் துல்லியமான படங்களைப் பெற உதவுகிறது. ஒளியைச் சார்ந்து செயல்படும் வழக்கமான கேமராக்கள்போல இல்லாமல், இது சொந்த சிக்னல்களை அனுப்பி படம் பிடிக்கிறது. இந்த சிக்னல்கள் மலைகள், காடுகள் அல்லது ஈரமான மண்பரப்பு, பனிக்கட்டிகள் ஆகியவற்றில் மோதிய பிறகு, மீண்டும் ரிஸீவர் சென்சாரை நோக்கிப் பிரதிபலிக்கிறது. இதன்மூலம் தெளிவான படங்களை எடுக்க முடிகிறது.

சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் வழியாக அண்டார்டிகாவின் பனிப்பாறைகள், ஈரநிலங்கள், நிலத்தடி நீர்மட்டம் ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்யலாம். இதில் 2 பேண்ட் ரேடார்கள் இருப்பதால் நிசார் செயற்கைக்கோள் மூலம் 10 மீட்டர் வரையான சிறிய பகுதிகளைகூட மிகத் தெளிவாக படம் பிடிக்கலாம். அந்த சிறிய பகுதியில் நிகழும் சில சென்டிமீட்டர் அளவிலான மாற்றங்களைகூட கண்டறிந்து, விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். பருவநிலை மாற்றம் ஆகியவற்றால் வருங்கால ங்களில் பூமியில் நிகழும் மாற்றங்களை விஞ்ஞானிகள் அதிகம் தெரிந்துகொள்ள நிசார் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லிமும்பை வழித்தடத்தில் மதுராகோட்டா பிரிவில் கவாச் 4.0 இயக்கப்பட்டது ரயில்வே அமைச்சர் ஸ்ரீ அஸ்வினி வைஷ்ணவ்



இந்திய ரயில்வே, மதுரா கோட்டா பிரிவில், அதிக அடர்த்தி கொண்ட டெல்லி மும்பை பாதையில், உள்நாட்டு ரயில்வே பாதுகாப்பு அமைப்பை கவாச் 4.0 இயக்கியது. நாட்டில் ரயில்வே பாதுகாப்பு அமைப்புகளை நவீனமயமாக்குவதில் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.

ரயில்வே அமைச்சர் ஸ்ரீ அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்: "மாண்புமிகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி ஜியின் 'ஆத்ம நிர்பர் பாரத்' தொலைநோக்குப் பார்வையிலிருந்து உத்வேகம் பெற்று, கவாச் தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பை ரயில்வே உள்நாட்டிலேயே வடிவமைத்து, உருவாக்கி, தயாரித்துள்ளது. கவாச் 4.0 என்பது தொழில்நுட்பம் சார்ந்த அமைப்பாகும். இது ஜூலை 2024 இல் ஆராய்ச்சி வடிவமைப்புகள் மற்றும் தரநிலைகள் அமைப்பால் (RDSO) அங்கீகரிக்கப்பட்டது. பல வளர்ந்த நாடுகள் ரயில் பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்கி நிறுவ 2030 ஆண்டுகள் ஆனது. கோட்டா மதுரா பிரிவில் கவாச் 4.0 இயக்கப்பட்டது மிகக் குறுகிய காலத்தில் அடையப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய சாதனை."

சுதந்திரத்திற்குப் பிறகு கடந்த 60 ஆண்டுகளில் நாட்டில் சர்வதேச தரத்திலான மேம்பட்ட ரயில் பாதுகாப்பு அமைப்புகள் நிறுவப்படவில்லை. ரயில் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, கவாச் அமைப்பு சமீபத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

30,000 க்கும் மேற்பட்டோர் ஏற்கனவே கவாச் அமைப்புகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

பயனுள்ள பிரேக் பயன்பாட்டின் மூலம் ரயில் வேகத்தை பராமரிக்க லோகோ பைலட்டுகளுக்கு கவாச் உதவும். மூடுபனி போன்ற குறைந்த தெரிவுநிலை சூழ்நிலைகளில் கூட, லோகோ பைலட்டுகள் சிக்னலுக்காக கேபினிலிருந்து வெளியே பார்க்க வேண்டியதில்லை. கேபினுக்குள் நிறுவப்பட்ட டேஷ்போர்டில் உள்ள தகவல்களை விமானிகள் பார்க்கலாம்.

கவாச் என்றால் என்ன?

* கவாச் என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரயில் பாதுகாப்பு அமைப்பு. ரயில் வேகத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதன் மூலம் விபத்துகளைத் தடுக்க இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

* இது பாதுகாப்பு ஒருமைப்பாடு நிலை 4 (SIL 4) இல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு வடிவமைப்பின் மிக உயர்ந்த நிலை.

* கவாச்சின் மேம்பாடு 2015 இல் தொடங்கியது. இந்த அமைப்பு 3 ஆண்டுகளுக்கும் மேலாக விரிவாக சோதிக்கப்பட்டது.

* தொழில்நுட்ப மேம்பாடுகளுக்குப் பிறகு, இந்த அமைப்பு தெற்கு மத்திய ரயில்வேயில் (SCR) நிறுவப்பட்டது. முதல் செயல்பாட்டுச் சான்றிதழ் 2018 இல் வழங்கப்பட்டது.

* SCR இல் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், மேம்பட்ட பதிப்பு 'கவாச் 4.0' உருவா க்கப்பட்டது. இது மே 2025 இல் மணிக்கு 160 கிமீ வேகம் வரை அங்கீகரிக்கப்பட்டது.

* கவாச் கூறுகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

கவாச் என்பது மிகவும் சிக்கலான அமைப்பாகும்

கவாச்சை இயக்குவது ஒரு தொலைத்தொடர்பு நிறுவனத்தை அமைப்பதற்குச் சமம். இதில் பின்வரும் துணை அமைப்புகள் அடங்கும்:

1. RFID குறிச்சொற்கள்: பாதையின் முழு நீளத்திலும் ஒவ்வொரு 1 கிமீ தூரத்திலும் நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிக்னலிலும் குறிச்சொற்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த RFID குறிச்சொற்கள் ரயில்களின் துல்லியமான இருப்பிடத்தை வழங்குகின்றன.

2. தொலைத்தொடர்பு கோபுரங்கள்: ஆப்டிகல் ஃபைபர் இணைப்பு மற்றும் மின்சாரம் உள்ளிட்ட முழு அளவிலான தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஒவ்வொரு சில கிலோமீட்டருக்கும் பாதை நீளம் முழுவதும் நிறுவப்பட்டுள்ளன. ரயில் நிலையங்களில் நிறுவப்பட்ட கவாச் அமைப்புகள் மற்றும் நிலையங்களில் கவாச் கட்டுப்படுத்திகள் இந்த கோபுரங்களைப் பயன்படுத்தி தொடர்ந்து தொடர்பு கொள்கின்றன. இது ஒரு தொலைத்தொடர்பு ஆபரேட்டரைப் போன்ற முழுமையான நெட்வொர்க்கை நிறுவுவதற்குச் சமம்.

3. லோகோ கவாச்: இது தண்டவாளங்களில் நிறுவப்பட்ட RFID குறிச்சொற்களுடன் தொடர்பு கொள்கிறது மற்றும் தகவலை தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு அனுப்புகிறது மற்றும் ஸ்டேஷன் கவாச்சிலிருந்து ரேடியோ தகவல்களைப் பெறுகிறது. லோகோ கவாச் என்ஜின்களின் பிரேக்கிங் சிஸ்டத்துடனும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அவசரகால சூழ்நிலை ஏற்பட்டால் பிரேக்குகள் பயன்படுத்தப்படுவதை இந்த அமைப்பு உறுதி செய்கிறது.

4. ஸ்டேஷன் கவாச்: ஒவ்வொரு ஸ்டேஷன் மற்றும் பிளாக் பிரிவிலும் நிறுவப்பட்டுள்ளது. இது லோகோ கவாச் மற்றும் சிக்னலிங் அமைப்பிலிருந்து தகவல்களைப் பெறுகிறது மற்றும் பாதுகாப்பான வேகத்திற்காக லோகோ கவாச்சை வழிநடத்துகிறது.

5. ஆப்டிகல் ஃபைபர் கேபிள் (OFC): அதிவேக தரவு தொடர்புக்காக இந்த அமைப்புகள் அனைத்தையும் இணைக்கும் தண்டவாளங்களில் ஆப்டிகல் ஃபைபர் அமைக்கப்பட்டுள்ளது.

6. சிக்னலிங் அமைப்பு: சிக்னலிங் அமைப்பு லோகோ கவாச், ஸ்டேஷன் கவாச், தொலைத்தொடர்பு கோபுரங்கள் போன்றவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

1 ஆப்டிகல் ஃபைபர் 5,856 கி.மீ.

2 தொலைத்தொடர்பு கோபுரங்கள் 619 நிறுவப்பட்டன

3 கவாச் நிலையங்கள் 708

4 லோகோஸ் 1,107 இல் நிறுவப்பட்ட கவாச்

5 தண்டவாள உபகரணங்கள் 4,001 ஆர்.கே.எம்.

பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் இந்திய ரயில்வே ஆண்டுக்கு 1 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்கிறது. பயணிகள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட பல முயற்சிகளில் கவாச் ஒன்றாகும். ஏற்பட்ட முன்னேற்றமும் கவாச் பயன்படுத்தப்படும் வேகமும் ரயில்வே பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய ரயில்வேயின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றன.



## நர்ச்சர் அறக்கட்டளையின் 9வது ஆண்டு விழா இயற்கை உணவு, விவசாயம் சார்ந்த விழிப்புணர்வு பேரணி

திருச்சி, ஆக.01-

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் இயங்கி வரும் நர்ச்சர் அறக்கட்டளையின் ஒன்பதாவது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளையின் நிறுவன தலைவர் டாக்டர் சோபனா ஆனந்த் மற்றும் சிறப்பு விருதுகள் குத்து விளக்கு ஏற்றி வைத்து விழாவை துவக்கி வைத்தனர். நர்ச்சர் அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வரும் தனி சிறப்பு வகுப்பில் பயிலும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாக வந்து விழாவில் கலந்து கொண்டனர். மேலும் இயற்கை உணவு, இயற்கை விவசாயம் சார்ந்த விழிப்புணர்வு பேரணி பன்னாங்கொம்பு அரசு மேல்நிலை பள்ளியிலிருந்து, ஆண்டு விழா மண்டபம் வரை பேரணி நடைபெற்றது. இதன் மூலம் அந்த பகுதியில் பாரம்பரிய உணவு மற்றும் இயற்கை விவசாயம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்நிகழ்வு அமைந்தது. சிறப்பு விருந்தினர்களாக தங்கபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். வேளாண்மை பயிற்சியாளர் ஃபார்ம் இந்தியா மற்றும் தேவகி செல்லையா இயற்கை வேளாண் பயிற்சியாளர் திருச்சிராப்பள்ளி ஆகியோர் கலந்து கொண்டனர். கடந்த 2024 ஆம் ஆண்டு நமது அறக்கட்டளையின் மூலம் நடைபெற்ற செயல்பாடுகள் குறித்து ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. மேலும் அனைத்து கிராம மாணவர்கள் பங்கேற்க கூடிய கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தளிர் கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி விழாவில் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆண்டுபத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற அனைத்து கிராம மாணவர்களுக்கும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்க ப்பட்டது. விழாவில் நர்ச்சர் அறக்கட்டளையில் மக்கள் தொடர்பு அலுவலராக உள்ள ஜெயச்சந்திரன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.




## வாரிய சந்தா தொகை இணைய வழியில் செலுத்த பத்து ரூபாய் இயக்கம் கோரிக்கை மனு

திருப்பூர், ஆக.01-

பத்து ரூபாய் இயக்கத்தை சேர்ந்த தகவல் உரிமைச் சட்ட ஆர்வலரின் அமைப்பு பிரதிநிதி, திருப்பூர் மாவட்ட துணைச் செயலாளர் M. செல்லம் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கு நேரில் கொடுத்த கோரிக்கை மனுவில், தற்பொழுது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய சந்தா தொகை இணைய வழியில் செலுத்தப்பட்டு வருகிறது.இவற்றை விரிவுபடுத்தும் வகையில் திருப்பூர் கோட்டத்திலும் இந்த இணைய வழி சேவையை தொடர திருப்பூர் கோட்ட நிர்வாக பொறியாளர் அவர்களுக்கு சுற்றறிக்கை வாயிலாக தெரிவிக்க வேண்டி மனு செய்துள்ளார்.

## தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை 12% குறைவாக பெய்துள்ளது: வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை:, ஆக.01-

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை 12% குறைவாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் இயல்பாக 119.7 மி.மீ. மழை பொழியும் நிலையில் இதுவரை 104.8 மி.மீ. மழை பொழிந்துள்ளது.சென்னை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை இன்று வரை இயல்பை விட 16% கூடுதலாக பெய்துள்ளது. சென்னையில் இயல்பாக 171.9 மி.மீ மழை பொழியும் நிலையில், இன்று வரை 198.8 மி.மீ மழை பொழிந்துள்ளது.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற 'நான் முதல்வன் உயர்வுக்குப்படி' உயர்கல்வி வழிகாட்டுதலுக்கான மாணவர் சிறப்பு குறைதீர் முகாமில், மாவட்ட நிர்வாகம், திண்டுக்கல் கல்வி அறக்கட்டளை மற்றும் கல்லூரி நிர்வாகங்கள் மூலமாக உயர்கல்வி உதவித்தொகை மற்றும் கட்டணச்சலுகை ஆணைகள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள

## சின்ன பெரிய கோம்பை மற்றும் குதிரையாறு நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையினை 5 ஆண்டு காலத்திற்கு மீன்பிடி குத்தகைக்கு விட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள்

திண்டுக்கல், ஆக.01-

திண்டுக்கல் மாவட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள சின்ன பெரிய கோம்பை மற்றும் குதிரையாறு நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையினை 5 ஆண்டு காலத்திற்கு மீன்பிடி குத்தகைக்கு விட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழக ஆளுநர் சார்பாக ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு www.tntenders.gov.in என்னும் இணையதள முகவரியில் பார்வையிடவும். இந்த இணையவழி ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் இதர படிவங்களை மேற்குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் 19494/F3/2024/5 மற்றும் 19494/F3/2024/6 என்ற ஏல அறிவிப்பு எண்ணிணை உள்ளீடு செய்து கட்டணமின்றி இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையவழி ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளியை ஆகஸ்ட் 6ஆம் தேதி அன்று மாலை 5 மணிவரை சமர்ப்பிக்கலாம்.

ஏலம் தொடர்பான தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களுக்கு in-landfisheries15@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பியும் அல்லது திண்டுக்கல் மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். ஏல அறிவிப்பில் மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் மேற்காணும் இணையதளம் மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை. உதவி இயக்குநர் அலுவலகம், 80 அடி ரோடு, நேரூஜி நகர், திண்டுக்கல் - 624 001 என்ற முகவரியிலும், 0451- 2900148, 9751664565 மற்றும் 7598236815 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தெரிவித்துள்ளார்.

# தெற்காசிய நீல புரட்சிக்கு வித்திடும் முதல் தானியங்கி ஆழ்கடல் துறைமுகம் 'விழிஞ்ஞும்'

சென்னை, ஆக.01-

சர்வதேச பன்னோக்கு சரக்கு கப்பல் போக்குவரத்தால் தெற்காசியாவின் நீல புரட்சிக்கு வித்திடும் இந்தியாவின் முதல் ஆழ்கடல் தானியங்கி துறைமுகமாக கேரளாவின் விழிஞ்ஞும் துறைமுகம் முத்திரை பதித்து வருகிறது.

பன்னாட்டு கடல் மார்க்கத்தில் ஐரோப்பா, பாரசீக வளைகுடா, மற்றும் துபாய், சிங்கப்பூர் போன்ற மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் கடல்சார் மேலாண்மைக்கான இந்திய நுழைவுவாயிலாக உள்ள கேரளாவின் விழிஞ்ஞும் தானியங்கி துறைமுகம் கடந்த மே மாதம் பிரதமர் மோடியால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

உலக வர்த்தகத்தில் இந்திய கடல் பயணத்தில் மகத்தான அத்தியாயத்தை தொடங்கியுள்ள இந்த துறைமுகம் சர்வதேச கடல் எல்லையில் இருந்து 10 நாட்டிக்கல் மைல் தொலைவில் உள்ளது. கொழும்பு துறைமுகத்துக்கு அருகாமையில் புவியியல் ரீதியாக இயற்கையாகவே 18 முதல் 20 மீட்டர் ஆழம் கொண்ட இந்தியாவின் ஆழமான துறைமுகமாக விழிஞ்ஞும் உருவெடுத்துள்ளது.

இதனால் சுமார் 24 ஆயிரத்து 500 கண்டெய்னர்களை சுலபமாக ஏற்றி, இறக்கிச்செல்லும் எம்எஸ்சி அரினா போன்ற சர்வதேச பிரமாண்ட சரக்கு கப்பல்கள் கூட இங்கு வந்து எளிதாக சரக்கு போக்குவரத்தை கையாளும் வகையில் அனைத்து செயல்பாடுகளும் தானியங்கி முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கேரள அரசு, மத்திய அரசு மற்றும் அதானி குழுமத்தின் கூட்டு முயற்சியால் பொது தனியார் கூட்டாண்மை பங்களிப்புடன் சுமார் ரூ. 8 ஆயிரம் கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த துறைமுகத்தில் சோதனை முயற்சியாக கடந்த 2024 ஜூலை முதல் தற்போது வரை 415 சரக்கு கப்பல்கள் வந்து சென்றுள்ளன.

முதற்கட்ட பணியில் 10.50 லட்சம் கண்டெய்னர்களை கையாளும் வகையிலும், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது கட்ட விரிவாக்கப் பணிகள் மூலமாக சுமார் 45 லட்சம் கண்டெய்னர்களை கையாளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இயற்கை சீற்றங்களில் இருந்து இந்த துறைமுகத்தை பாதுகாக்கவும், கப்பல்கள் எவ்வித இடையூறும் இல்லாமல் வந்து செல்ல கடல் நீரோட்டம் ஆர்ப்பாட்டமின்றி அமைதியான முறையில் இருக்கவும் ரூ. ஆயிரத்து 500 கோடி செலவில் 3 கிமீ தூரத்துக்கு ஆழ்கடலின் நடுவே அக்ரோபாட்ஸ் கற்களுடன் கூடிய வாட்டர் பிரேக்கிங் சிஸ்டம் எனப்படும் பிரமாண்ட அலை தாங்கி தடுப்பணை பொறியியல் அற்புதமாக திகழ்கிறது.



சென்னை ஐஐடியுடன் இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன தானியங்கி கப்பல் கிரேன்கள், தானியங்கி யார்டு கிரேன்கள், செயற்கை நுண்ணறிவுடன் கூடிய விடிஎம்எஸ் (வெஸ்ஸல் டிராபிக் மேனேஜ்மெண்ட் சிஸ்டம்) தொழில்நுட்பத்தால் இந்த துறைமுகத்தின் ஒட்டுமொத்த மேலாண்மை மற்றும் இயக்கப்பணிகளும் மைய அலுவலகத்தின் கண்ணாடி கூண்டுகளுக்குள் இருக்கும் அதானி குழும ஊழியர்களால் கணினி வழியாக கண்காணிக்கப்பட்டு, லாவகமாக இயக்கப்படுகிறது. இதனால் ஒன்றரை நிமிடங்களுக்குள் ஒரு கண்டெய்னர் யார்டில் இறக்கவோ, ஏற்றவோ செய்யப்படுகிறது.

இந்தியாவுக்கே முன்னோடியாக விளங்கும் இந்த சர்வதேச துறைமுகத்தின் சிறப்பம்சங்கள் குறித்து அதானி குழும அதிகாரிகள் கூறுகையில், "கடல், ஆகாயம் மற்றும் சாலை மார்க்கத்தில் சரக்கு கண்டெய்னர் போக்குவரத்தை எளிமையாக தானியங்கி முறையில் கையாளும் வகையில் இந்த துறைமுகம் நாட்டுக்கே முன்னோடியாக தனது பணியை தொடங்கி செயலாற்றி வருகிறது. அந்த வகையில் திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் இந்த துறைமுகத்தில் இருந்து 16 கிமீ தொலைவில் உள்ளது.

ஒரு கிமீ தூரத்தில் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. இத்துறைமுகத்தில் இருந்து 10 கிமீ தூரத்துக்கு பலராமபுரம் வரை திருவனந்தபுரம் கன்னியாகுமரி ரயில் வழித்தடத்தை இணைக்கும் வகையில் சுரங்க ரயில் வழித்தடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்போது ஓராண்டுக்கு சராசரியாக சுமார் 50 முதல் 60 லட்சம் கண்டெய்னர்கள் கப்பல்களில் பரிமாற்றம் செய்யப்படுகிறது. இதில் சுமார் 75 சதவீத பரிமாற்றம் கொழும்பு, துபாய், சிங்கப்பூர் போன்ற பிராந்திய வெளிநாட்டு துறைமுகங்கள் மூலமாக நடைபெற்று வரும் நிலையில் இந்தியாவின் உள்நாட்டு சரக்கு பரிமாற்றத்துக்கு விழிஞ்ஞும் துறைமுகம் சிறந்த தீர்வு. கடல்சார் உள்நாட்டு வணிகம், வேலைவாய்ப்பு, சுற்றுலா போன்றவை பன்மடங்காக பெருகும்.

கண்டெய்னர் கையாளுதல் கட்டணமும் 200 முதல் 300 டாலர் வரை கணிசமாக குறையும். பன்னோக்கு திட, திரவ கப்பல் தளம், அதிநவீன தொழில்நுட்பம், பசுமை சூழல், ஆழ்கடல் கழிவு மேலாண்மை, குறைவான கார்பன் உமிழ்வு, பதுங்குகுழிகள், குடோன்கள் என நிலையான உள்கட்டமைப்பை இத்துறைமுகம் பெற்றுள்ளது.

வெளிநாட்டு துறைமுகங்கள் பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்தும் ஜேட் மற்றும் டிராகன் சேவை வழித்தடத்தில் விழிஞ்ஞும் இணைக்கப்பட்டு இருப்பது மற்றொரு சிறப்பு. இதன்மூலம் சர்வதேச பன்னோக்கு சரக்கு கப்பல் போக்குவரத்தால் தெற்காசிய நீல புரட்சிக்கு வித்திடும் இந்தியாவின் முதல் தானியங்கி கிரேன் துறைமுகம் என்ற பெருமையை இத்துறைமுகம் பெற்றுள்ளது.

இன்னும் 10 ஆண்டுகளில் இந்தியா 10 லட்சம் கோடி டாலர் என்ற மிகப் பெரிய கடல்சார் பொருளாதார இலக்கை எட்ட விழிஞ்ஞும் தனது பங்களிப்பை வழங்கும்'' என்றனர்.

# போக்குவரத்து தொழிலாளர் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்காதது ஏன்? உயர் நீதிமன்றம்



சென்னை, ஆக.01-

மருத்துவ ரீதியாக தகுதி இழக்கும் போக்குவரத்து தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்காதது ஏன் என்பது குறித்து விளக்கமளிக்க தமிழக போக்குவரத்துத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவரீதியாக பணியாற்றும் தகுதியை இழக்கும் அரசுத்துறை ஊழியர்களுக்கு அவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் நிலையில், மருத்துவ ரீதியாக தகுதி இழக்கும் போக்குவரத்துக்கழக தொழிலாளர்கள் குடும்பத்தினருக்கும், கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பாக கொள்கை வகுத்து அமல்படுத்த உத்தர விடக் கோரி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஊழலுக்கு எதிரான தொழிற்சங்க பேரவை சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீ வஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் அமர்வு, தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் நிர்வாக பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் மருத்துவ ரீதியாக தகுதி இழக்கும் போது அவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கும் போது, நேரடியாக பொது போக்குவரத்து வசதிகளை வழங்கும் பணியில் உள்ள போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு இச்சலுகைகள் வழங்காதது ஏன் என கேள்வி எழுப்பி, இதுசம்பந்தமாக ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் பதிலளிக்க வேண்டும் என தமிழக போக்குவரத்துத்துறை செயலாளருக்கும், அரசு போக்குவரத்து கழகங்களுக்கும் உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்தது.

# சர்வேயர், வரைவாளர் பதவிகளுக்கு ஆக.19 முதல் 4-வது கட்ட கலந்தாய்வு: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு

சென்னை, ஆக.01-

சர்வேயர், வரைவாளர் பதவிகளுக்கான 4வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு ஆகஸ்ட் 19 முதல் 22ம் தேதி வரை நடைபெறும் என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் எஸ்.கோபாலசுந்தரராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடந்த 2022ம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்வில் நிலஅளவர் (சர்வேயர்), வரைவாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான 4வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு சென்னையில் உள்ள டிஎன்பிஎஸ்சி அலுவலகத்தில் ஆகஸ்ட் 19 முதல் 22ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இதற்கு அழைக்கப்பட்டுள்ள தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு இருக்கிறது. அழைப்பாணையை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். இதுகுறித்து சம்பந்தப்பட்ட தேர்வர்களுக்கு எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்பட்டு தேர்வுசெய்யப்படுவர் என்பதற்கு உறுதி அளிக்க இயலாது. குறிப்பிட்ட தேதியில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு வரத்தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மெட்ரோவில் புகையிலை பொருட்களை பயன்படுத்த தடை: மீறினால் அபராதம்



சென்னை, ஆக.01-

மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் மெல்லக்கூடிய புகையிலை பொருட்கள் பயன்படுத்ததடை விதிக்கப்பட்டுள்ளது. மீறி பயன்படுத்தினால், மெட்ரோ ரயில்வே சட்டத்தின் கீழ், ரூ.500 அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னையில், 2 வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் நாள்தோறும் தூய்மையாக வைத்திருக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்கிடையில், மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் மெல்லக் கூடிய புகையிலை பொருட்களை சிலர் பயன்படுத்துகின்றனர். இதன் விளைவாக, எச்சில் துப்புவது, ஆங்காங்கே புகையிலை குப்பைகள் கொட்டுவது போன்ற சுகாதாரமற்ற நிலை காணப்படுகின்றன. இது தொடர்பாக புகார்கள் வந்தன.

இதை கருத்தில் கொண்டு, மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் மெல்லக் கூடிய புகையிலை பொருட்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறி பயன்படுத்தினால், அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: புகையிலையை உட்கொள்வது உடல் நலத்துக்குமிகவும் தீங்கு விளைவிப்பதுடன், பொது இடங்களில் சுகாதார சீர்கேட்டையும் ஏற்படுத்துகிறது. மெட்ரோ ரயில்கள் மற்றும் நிலையங்களில் தூய்மை, சுகாதாரத்தை பராமரிக்க பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ரயில் நிலையங்கள், மெட்ரோ ரயில்களுக்கு உள்ளேயும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். மெல்லக் கூடிய புகையிலைப் பொருட்களை மெட்டல் டிடெக்டர்கள் மூலம் கண்டறிய முடியாததால், நெரிசல் இல்லாத நேரங்களில் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்படும். இதுதவிர, பயணிகளின் நடவடிக்கைகளை நடைமேடை பாதுகாப்புப் பணியாளர்கள் உன்னிப்பாகக் கண்காணிக்க அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

ரூ.500 அபராதம்: தூய்மை மற்றும் நடத்தை விதிமுறைகளை மீறும் பயணிகளுக்கு மெட்ரோ ரயில்வே (செயல்பாடு மற்றும் பராமரிப்பு) சட்டம் மற்றும் மெட்ரோ ரயில்வே கேரஜ் மற்றும் டிக்கெட் விதிகள் சட்டத்தின் கீழ், ரூ.500 அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சென்னையில் மின்சார பேருந்துகள் மூலம் ரூ.90 லட்சம் சேமிப்பு

சென்னை, ஆக.01-

சென்னையில் மின்சாரப் பேருந்துகள் மூலம் எரிபொருள் செலவு ரூ.90 லட்சம் சேமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகர போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியதாவது: சென்னையில் 120 மின்சாரப் பேருந்துகளின் சேவையை முதல்கட்டமாக கடந்த மாதம் 30ம் தேதி சென்னை வியாசர்பாடி பணிமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அந்த வகையில் சென்னையில் இயக்கப்படும் மின்சார பேருந்துகளில் கடந்த மாதம் 30ம் தேதி தொடங்கி இந்த மாதம் 28ம் தேதி வரை 12.80 லட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த காலகட்டத்தில் டீசல் பேருந்துகளை இயக்கியிருந்தால் அரசுக்கு ரூ.1 கோடியே 60 லட்சம் செலவாகி இருக்கும். மின்சாரப் பேருந்துகளை இயக்கியதன் மூலம் ரூ.70 லட்சம் மட்டுமே செலவாகியுள்ளது. இதனால் ரூ.90 லட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. இந்த 120 மின்சாரப் பேருந்துகள் 6 லட்சத்து 55 ஆயிரம் கிமீ வரை இயக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# “பாகிஸ்தானிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம்” ட்ரம்ப்



வாஷிங்டன், ஆக.01-

“ஒருநாள், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம்.” என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார். இது சர்வதேச அளவிலும், இந்திய அரசியலிலும் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

முன்னதாக நேற்று, இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பை அமல்படுத்துவதாக ட்ரம்ப் அறிவித்தார். இந்த வரி விதிப்பு நாளை முதல் (ஆக.1) அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், “ஒருநாள், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரும்.” என்று கூறி ட்ரம்ப் அடுத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில், “நாங்கள் இப்போது தான் பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். அதன்படி, பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகப்பெரிய எண்ணெய் இருப்பை உருவாக்கவுள்ளோம். இது தெற்காசியாவின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பாக அமையும். இதை முன்னெடுத்துச் செல்லத் தகுதியான எண்ணெய் நிறுவனத்தை தேர்வு செய்து வருகிறோம். யாருக்குத் தெரியும், ஒருநாள் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எண்ணெய் விற்கலாம்.” எனத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கு பாகிஸ்தான் தரப்பில் இருந்து உடனடியாக எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

முன்னதாக, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், பாகிஸ் தானின் கடல் பகுதியில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவின் குறிப்பிடத்தக்க இருப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில், பாகிஸ்தான் கடல் பகுதியில் கண்டறியப்பட்ட எண்ணெய் வளம், உலகளவில் நான்காவது பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டன. இந்நிலையில், ட்ரம்ப்பின் இன்றைய சமூக வலைதளப் பதிவை அந்தச் செய்தியுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

‘டெட் எக்கானமி’

அது மட்டுமல்லாது ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் இந்திய, ரஷ்யப் பொருளாதாரங்களை ‘டெட் எக்கானமி’ ( Dead Economies), அதாவது மிக மோசமான நிலையில், மீடக் முடியாத சூழலில் இருக்கும் பொருளாதாரம் என்று குறிப்பிட்டுள்ளார். “இந்தியா, ரஷ்யாவுடன் என்ன மாதிரியான செயல்களில் ஈடுபடுகிறது என்பது பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால். இரண்டு நாடுகளும் தங்களின் மோசமான பொருளாதார நிலையை இணைந்து இன்னும் மோசமாக்கும்.” என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து சீண்டும் ட்ரம்ப்: இந்தியா பாகிஸ்தான் போரை நானே நிறுத்தினேன் என்று கூறியது, இந்தியாவுக்கு 25% இறக்குமதி வரி விதிப்போடு, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதற்காக அபராதம் விதித்தது, தற்போது பாகிஸ்தானில் மிகப்பெரிய எண்ணெய் இருப்பை உருவாக்குவதாகவும், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம் என்று அடுத்தடுத்து இந்தியாவை சீண்டி வருகிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நிறுத்தத்தின் மீதான ட்ரம்ப்பின் உரிமை கோரல் நாடாளுமன்றம் வரை விவாதப் பொருளாகியுள்ள நிலையில், இனி அடுத்தடுத்த நாட்களில் இறக்குமதி வரியும், எண்ணெய் விவகாரமும் கூட எதிரொலிக்கலாம்.



# நெல்லை ஆணவக் கொலை வழக்கு: சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன் கைது


திருநெல்வேலி, ஆக.01-

நெல்லையில் ஐ.டி. ஊழியர் கவின் செல்வகணேஷ் கொல்லப்பட்ட வழக்கில் ஏற்கெனவே கைதான சுர்ஜித்தின் தந்தை காவல் உதவி ஆய்வாளர் சரவணன் கைது செய்யப்பட்டார். நெல்லை மாநகர போலீஸார் அவரைக் கைது செய்தனர். முன்னதாக நேற்று, கவின் செல்வகணேஷ் கொலை வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின சமூக இளைஞரான மென்பொருள் பொறியாளர் கவின் செல்வகணேஷ் கடந்த 27ம் தேதி திருநெல்வேலி கேடிசி நகரில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் இவர் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரன் சுர்ஜித் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சாரணடைந்த நிலையில் சுர்ஜித் மற்றும் அவரது பெற்றோரான சரவணன் மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து சுர்ஜித்தை பாளையங்கோட்டை போலீஸார் கைது செய்தனர். அவரது பெற்றோரான சிறப்பு காவல் படை உதவி ஆய்வாளர்கள் சரவணன், கிருஷ்ணகுமாரி ஆகிய இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இருப்பினும், இருவரையும் கைது செய்தால் மட்டுமே கவின் செல்வகணேஷின் உடலை வாங்குவோம் என உறவினர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுர்ஜித், குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன் நெல்லை மாநகர போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



# மேட்டூரில் தண்ணீர் திறப்பு 40 ஆயிரம் கனஅடியாக குறைப்பு

மேட்டூர் / தருமபுரி, ஆக.01-

மேட்டூர் அணை கடந்த 25ம் தேதி நடப்பாண்டில் 4வது முறையாக நிரம்பியது. இதையடுத்து, அணைக்கு வரும் நீர் முழுவதும் காவிரியில் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 1,10,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று இரவு 40,500 கனஅடி யாக குறைந்தது.

அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 1.10 லட்சம் கனஅடியிலிருந்து நேற்று இரவு 40 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. கால்வாய் பாசனத்துக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணை நீர்மட்டம் நேற்று 120 அடியாக இருந்தது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் 1.25 லட்சம் கனஅடியாக பதிவான நீர்வரத்து நேற்று மாலை 57 ஆயிரம் கனஅடியாக குறைந்தது.

# “அண்ணா சொல்வதை போல...” தவெக செயலியை அறிமுகம் செய்த விஜய் பேச்சு



சென்னை, ஆக.01-

தமிழகத்தில் கடந்த 1967, 1977ம் ஆண்டு தேர்தலை போல 2026 சட்டப் பேரவை தேர்தலும் அமையும் என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். தவெக சார்பில் ‘மை டிவிகே’ எனும் உறுப்பினர் சேர்க்கை செயலி அறிமுக விழா கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் செயலியை விஜய் அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, ‘ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு’ என்ற பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். அப்போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 தலைமுறையினருக்கு உறுப்பினர் அடையாள அட்டையை விஜய் வழங்கினார்.

இதையடுத்து அவர் பேசியதாவது: தமிழக அரசியலில் 1967, 1977 ம் ஆண்டு தேர்தல்களை போல, 2026 தேர்தலும் அமைய போகிறது. அந்த இரண்டு மாபெரும் தேர்தல்களிலும், ஏற்கெனவே தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்தவர்களின் அதிகார பலம், அசுர பலம் என எல்லாவற்றையும் எதிர்த்து தான் புதிதாக வந்தவர்கள் வெற்றி கண்டார்கள்.

ஊருக்கு ஊர், வீதிக்கு விதி, வீட்டுக்கு வீடு என மக்களை நேரடியாக சந்தித்ததால் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அண்ணா சொல்வதை போல, மக்களிடம் செல், மக்களிடம் இருந்து கற்றுக் கொள், மக்களுடன் வாழ், மக்களுடன் சேர்ந்து திட்டமிடு.

இதை சரியாக செய்தாலே போதும், வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு என்ற பிரச்சாரத்தில் அனைத்து குடும்பங்களையும் ஒன்றிணைத்து, உறுப்பினர்களாக சேர்த்து நம்மால் நிச்சயம் வெற்றி பெற முடியும். அதனால், தான் ‘மைடிவிகே’ என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து மதுரை மாநாடு, மக்கள் சந்திப்பு, சுற்றுப் பயணம் என தொடர்ச்சியாக மக்களோடு மக்களாகதான் இருக்க போகிறோம். இவ்வாறு பேசினார்.

# பாஜக மாநில நிர்வாகிகள் பட்டியல் வெளியீடு: குஷ்பு உள்ளிட்ட 14 பேர் துணை தலைவர்களாக நியமனம்



சென்னை, ஆக.01-

தமிழக பாஜகவின் மாநில துணைத் தலைவர்கள், மாநில பொதுச் செயலாளர்கள், மாநில செயலாளர்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளின் தலைவர்கள் உள்ளிட்ட 51 பேர் அடங்கிய பட்டியலை பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று வெளியிட்டார்.

தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த குஷ்புவுக்கு, துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல, எம்.சக்கரவர்த்தி, வி.பி.துரைசாமி, கே.பி.ராமலிங்கம், கரு.நாக ராஜன், சசிகலா புஷ்பா, கனக சபாபதி, டால்பின் ஸ்ரீதர், ஏ.ஜி.சம்பத், பால்கனகராஜ் உள்ளிட்டோர் மாநில துணைத் தலைவர் பதவியைத் தொடர்கின்றனர்.

முன்னாள் எம்எல்ஏ கோபால் சாமி, ஜெயப் பிரகாஷ், வெங்கடேசன், சுந்தர் உள்ளிட்டோர் புதிதாக மாநில துணைத் தலைவர் களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பொன். வி.பால கணபதி, பேராசிரியர் ராம. சீனிவாசன், எம்.முருகானந்தம், பி.கார்த்தியாயினி, ஏ.பி.முருகானந்தம் ஆகியோர் மாநிலப் பொதுச் செயலாளர் பதவியில் தொடர்கின்றனர்.

விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு மாநிலத் தலைவராக இருந்த அமர் பிரசாத் ரெட்டிக்கு, மாநிலச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. கராத்தே தியாகராஜன் உள்ளிட்டோர் மாநிலச் செயலாளர் பதவியில் நீடிக்கின்றனர். கதளி நரசிங்கபெருமாள், நந்தகுமார், ரகுராமன் ஆகியோர் புதிதாக மாநிலச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இளைஞரணி மாநிலத் தலைவர் பதவிக்கு எஸ்.ஜி.சூர்யா, மகளிரணி மாநிலத் தலைவராக கவிதா ஸ்ரீகாந்த், ஓபிசி அணி மாநிலத் தலைவராக வீர.திருநாவுகரசு, எஸ்.சி. அணி மாநிலத் தலைவராக பி.சம்பத்ராஜ், எஸ்.டி. அணி மாநிலத் தலைவராக ஏ.சுமதி, சிறுபான்மையினர் அணி மாநிலத் தலைவராக ஜான்சன் ஜோசப் ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். விவசாய அணி மாநிலத் தலைவர் பதவியில் ஜி.கே. நாகராஜன் தொடர்கிறார்.

மேலும், அமைப்பு பொதுச் செயலாளர் கேசவ விநாயகன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், மாநில ஊடக அமைப்பாளர் ரங்கநாயகலு, மாநில அலுவலக செயலாளர் சந்திரன் ஆகியோர் தங்களது பதவியில் தொடர்கின்றனர். மாநில துணைத் தலைவராக இருந்த நாராயணன் திருப்பதிக்கு மாநில தலைமை செய்தி தொடர்பாளர் பொறுப்பும், ஆன்மிகப் பிரிவு மாநிலத் தலைவராக இருந்த நாச்சியப்பன் மற்றும் கே.டி.ராகவனுக்கு மாநிலப் பிரிவு அமைப்பாளர் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல, மாநில தகவல் தொழில்நுட்ப அமைப்பாளராக மகேஷ்குமார், சமூக ஊடக அமைப்பாளராக பாலாஜி நியமிக்கப்பட்டு உள்ளனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000